## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 7-4 - ஆழியெழ[1]
### (எம்பெருமானது விஜய பரம்பரைகளை அவன் காட்டக் கண்டு பேசுதல்)

3370 * ஆழி எழச் * சங்கும் வில்லும் எழ * திசை
வாழி எழத் * தண்டும் வாளும் எழ ** அண்டம்
மோழை எழ * முடி பாதம் எழ * அப்பன்
ஊழி எழ * உலகம் கொண்டவாறே 1

3371 ஆறு மலைக்கு * எதிர்ந்தோடும் ஒலி * அர
வூறு சுலாய் * மலை தேய்க்கும் ஒலி ** கடல்
மாறு சுழன்று * அழைக்கின்ற ஒலி * அப்பன்
சாறு பட * அமுதம் கொண்ட நான்றே 2

3372 நான்றில ஏழ் * மண்ணும் தானத்தவே * பின்னும்
நான்றில ஏழ் * மலை தானத்தவே ** பின்னும்
நான்றில ஏழ் * கடல் தானத்தவே * அப்பன்
ஊன்றி இடந்து * எயிற்றில் கொண்ட நாளே 3

3373 நாளும் எழ * நில நீரும் எழ * விண்ணும்
கோளும் எழ * எரி காலும் எழ ** மலை
தாளும் எழச் * சுடர் தானும் எழ * அப்பன்
ஊளி எழ * உலகம் உண்ட ஊணே 4

3374 ஊணுடை மல்லர் * ததர்ந்த[2] ஒலி * மன்னர்
ஆணுடைச் சேனை * நடுங்கும் ஒலி ** விண்ணுள்
ஏணுடைத் தேவர் * வெளிப்பட்ட ஒலி * அப்பன்
காணுடைப் பாரதம் * கையறை போழ்தே 5

3375 போழ்து மெலிந்த * புன் செக்கரில் * வான் திசை
சூழும் எழுந்து * உதிரப் புனலா ** மலை
கீழ்து பிளந்த * சிங்கம் ஒத்ததால் * அப்பன்
ஆழ் துயர் செய்து * அசுரரைக்[3] கொல்லுமாறே 6

3376 மாறு நிரைத்து * இரைக்கும் சரங்கள் * இன
நூறு பிணம் * மலை போல் புரள ** கடல்
ஆறு மடுத்து * உதிரப் புனலா * அப்பன்
நீறு பட * இலங்கை செற்ற நேரே 7

---
[1] இது சில தேசங்களில் கோவில் திருவாய்மொழி
[2] ததைந்த
[3] அசுரர்க்

3377 நேர் சரிந்தான் * கொடிக் கோழி கொண்டான் * பின்னும்
நேர் சரிந்தான் * எரியும் அனலோன் ** பின்னும்
நேர் சரிந்தான் * முக்கண் மூர்த்தி கண்டீர் * அப்பன்
நேர் சரி வாணன் * திண் தோள் கொண்ட அன்றே 8

3378 அன்று மண் நீர் எரி கால் * விண் மலை முதல் *
அன்று சுடர் * இரண்டு பிறவும் ** பின்னும்
அன்று * மழை உயிர் தேவும் மற்றும் * அப்பன்
அன்று முதல் * உலகம் செய்ததுமே 9

3379 மேய் நிரை கீழ் புக * மா புரள * சுனை
வாய் நிறை நீர் * பிளிறிச் சொரிய ** இன
ஆநிரை பாடி * அங்கே ஒடுங்க * அப்பன்
தீ மழை காத்துக் * குன்றம் எடுத்தானே 10

3380 * குன்றம் எடுத்த பிரான் * அடியாரொடும் *
ஒன்றி நின்ற * சடகோபன் உரை செயல் **
நன்றி புனைந்த * ஓராயிரத்துள் இவை *
வென்றி தரும் பத்தும் * மேவிக் கற்பார்க்கே 11

**அடிவரவு:** ஆழி ஆறு நன்று நாளும் ஊண் போழ்து மாறு நேர் அன்று
மேய் குன்றம் கற்பார்